**BSNLEU NFTE-BSNL**

# தமிழ்மாநில சங்கங்கள்

மாநில கவுன்சிலின் முடிவையடுத்து மருத்துவ பில்களின் தீர்வில்/ பட்டுவாடாவில் ஏற்படும் பிரச்சனைகள் குறித்து விவாதிக்க கமிட்டி ஒன்று அமைக்கப்பட்டது. அக்கமிட்டியின் கூட்டம் ஜூலை 17 அன்று CGMஅலுவலகத்தில் நடந்தது.

நிர்வாகத்தின் சார்பில் திரு ராஜி DGM A , திரு நடேசன் DGM F , திரு நாகராஜன் AGM சேதுராமன்AGM பத்மாவதி AO , ஆபிரகாம் SDE பங்கேற்றனர். ஊழியர் தரப்பில் BSNLEU தோழர்கள் செல்லப்பா, சிவகுமரன், NFTE சார்பில் முரளி, பட்டாபி பங்கேற்றனர்.

ஊழியர் தரப்பின் சார்பில் முன்வைக்கப்பட்ட அனைத்து கருத்துக்களையும் திறந்த மனதுடன் நிர்வாக தரப்பு அதிகாரிகள் செவிமடுத்தனர். விவாதங்களுக்கு பின்னர் இணைந்த முடிவுகள் எடுப்பதற்கும் உதவிகரமாக இருந்தனர். 20வது கவுன்சிலின் கூட்டக்குறிப்பு படிக்கப்பட்டு அதன் மீது ஊழியர் தரப்பு தலைவர்கள் தங்களது விவாதங்களை முன்வைத்தனர்.

- CGM அலுவலகத்திலிருந்து கார்ப்பரேட் அலுவலக வழிகாட்டுதல்களுக்கு அப்பாற்பட்டு, ஊழியர்கள் பில்கள் தீர்வதற்கு தடையாக இருக்கும் அவசர சிகிச்சை குறித்து வெளியிடப்பட்ட உத்தரவு விலக்கப்பட வேண்டும்.
- விசிட் சர்டி..பிகேட் பெறமுடியாத சூழலில் Exemption தரப்பட்டு அந்த பில்கள் பரிசீலிக்கப்படவேண்டும்.
- Non Empanelled Hospitalsன் emergency பில்களை SSAக்களில் நிறுத்துவது கூடாது. மாநில கவுன்சில் வழிகாட்டுதல் அடிப்படையில் மாவட்டங்கள் உடனடியாக MOU Empanelled Hospital தவிர Payment Hospital ஆக மருத்துவமனைகள் சிலவற்றை அறிவிக்கவேண்டும். இதன்மூலம் ஊரின் சிறந்த மருத்துவமனைகள் Non-empanelled என்ற பிரச்சனை இல்லாமல்

Payment Hospital முறையில் பில்கள் தீர்வில் உதவிகரமாக அமையும்.

- பிரசவம் என்பது எமெர்ஜென்சியல்ல என்று நிராகரிக்கப்படக்கூடாது. தீராமல் இருக்கும் பில்கள் விவரத்தி மாவட்டங்களிருந்து பெற்று பரிசீலித்திடவேண்டும். அதேநேரத்தில் MOU- Payment Hospitalகளில் Delivery என்கிற awareness உருவாக்கிட முயற்சிக்கலாம்.
- CGHS Rate ல் இல்லாத மருத்துவசேவை முதல்தடவை நடந்திருந்தால் உடனடியாக பில்களை பரிசீலித்து பண பட்டுவாடா செய்திடவேண்டும். அடுத்தமுறையெனில் GH/AIIMSயை அணுகலாம்
- சென்னையில் உள்ள தமிழ்மாநிலம் போட்டுள்ள MOU Hospital தொடரவேண்டும். அந்த அதிகாரமும் திரும்பபெறப்படுவதற்கு கார்ப்பரேட் அலுவலகத்திற்கு கடிதம் எழுதப்பட வேண்டும்
- GM இல்லாத மாவட்டங்களில் பக்கத்து மாவட்டங்களில் சிகிச்சை பெறுவதற்கு DGM கடிதம் தரலாம். இதன் மூலம் காலதாமதம் தவிர்க்கப்பட்டு உரிய நேரத்தில் ஊழியர் மருத்துவசதி பெறமுடியும்.
- மாநில அலுவலகத்திலிருந்து குறைகள் காரனாமாக திரும்ப அனுப்பப்படும் பில்கள் செக்லிஸ்ட் பார்க்கப்பட்டு ஒருமுறை மட்டுமானதாக இருக்கவேண்டும். திரும்ப திரும்ப அனுப்புதல் கூடாது.
- வெளிப்புற மருத்துவ சிகிச்சைக்கு CGHS Rate என விதிமீறல் செய்திடும் மாவட்டங்கள் Actual Payment குறித்து அறிவுறுத்தப்படவேண்டும்
- CGM அலுவலக ஒப்புதலுக்கு பின்னரும் மாவட்டங்களில் பணப்பட்டுவாடா தாமதம் தவிர்க்கப்படவேண்டும்
- ஊழியர்கள்- குடும்பத்தினர்களுக்கு வரும் மிகுந்த மனிதாபிமானத்துடன் பார்க்கப்படவேண்டிய மருத்து தேவைகளுக்கு உதவக்கூடிய மனப்பாங்கில் விதிகளை பார்த்து பரிசீலனைகள் அமைந்திடவேண்டும். முடியாதபோது

கார்ப்பரேட் அலுவலகத்திற்கு கொண்டு போயாவது தீர்க்க முயற்சிக்க வேண்டும்.

நமது மேற்கூறிய கோரிக்கைகளுக்கு சில தீர்வுகளை கமிட்டியிலேயே அதிகாரிகள் ஏற்றுகொண்டனர். இரு சங்கங்கள் சார்பில் நாம்கொடுத்த பல்வேறு தோழர்களின் Individual Cases மேற்கூறிய நமது உணர்வுகளையும் கணக்கில்கொண்டு பரிசீலிக்கப்பட கோரியுள்ளோம்

- OP குறித்த Actual expenses வழிகாட்டுதல் மாவட்டங்களுக்கு அனுப்பப்படும்
- மாநில அலுவலகத்திலிருந்து மாவட்டங்களுக்கு All Queries at a Time என்பது பின்பற்றப்படும்
- பில்களுக்கு Time Frame Settlement என்பது முயற்சிக்கப்படும்
- சென்னையில் MOU போடும் அதிகாரம் குறித்து கார்ப்பரேட் அலுவலகத்திற்கு கடிதம் எழுதப்படும் சங்கங்களும் டெல்லியில் பிரச்சனை தீர முயற்சிக்க வேண்டும்.
- கார்ப்பரேட் விதிகள் புறக்கணிக்கபட்டதாக சுட்டிகாட்டப்பட்ட பிரச்சனைகள் பரிசீலிக்கப்படும்
- பிற கோரிக்கைகள் நிர்வாக அளவில் விவாதிக்கப்பட்டு தீர்விற்கு வழிவகை செய்யப்படும்
- மூன்று மாதத்திற்கு ஒருமுறை மருத்துவ கமிட்டிகூடி தேங்கி நிற்கும் பிரச்சனை தீர்விற்கு வழிவகை காணப்படும்.

கமிட்டி விவாதத்திற்கு ஒத்துழைத்த அதிகாரிகள்- பிரச்சனைகளை தெரிவித்த மாவட்ட சங்கங்களுக்கு /தோழர்களுக்கு நமது நன்றி.

தோழமையுடன்,

S செல்லப்பா R பட்டாபிராமன்

மா.செ BSNLEU மா.செ NFTE BSNL 17-7-14